# வ[ளி]ழி தேடும் புல்லாங்குழல்



செ.கஜானனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளிழி தேடும் புல்லாங்குழல்

செல்வராசா கஜானன்

வெளியீடு

கோபால் வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல் |
| நூலின் வகை | : | புதுக்கவிதை |
| நூலாசிரியர் | : | செல்வராசா கஜானன் |
| வெளியீடு | : | கோபால் வெளியீட்டகம் |
| பக்கங்கள் | : | 82 |
| பிரதிகள் | : | 500 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| நூல் வடிவமைப்பு | : | எஸ்.விஜய் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர். 2016 |
| தொடர்புகளுக்கு | : | முகநூல் Kajanan Selvarasa<br>தொலைபேசி 077 7242041<br>ஈ-மெயில் kajanancylon@gmail.com |
| அச்சகம் | : | விஜய் அச்சுப் பதிப்பகம்.<br>077 9009491 / 024 2225799 |
| ISBN | : | 978-955-7899-02-2 |
| விலை | : | 220/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பல்வேறுபட்ட நிலைகள் சமூக நீதியையும் மாற்றங்களையும், பேதங்களையும், இன்னோரன்னா வழிகளில் அறிஞர்களும் கலைஞர்களும் வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வழியில், பச்சிலைப்பள்ளி மண்ணின் இளஞ் சந்ததியினர் எடுக்கின்ற முயற்சியானது பாராட்டப்படவேண்டிய தொன்றாகும். அந்தவகையில் செ.கஜானனன் அவர்கள் கலை மீதும், தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் மீதும் வைத்திருக்கும் அளவற்ற காதலே மேற்படி கவிதைத் தொகுப்பின் வெளிப்பாடாகும். எனவே இக்கவிதைத் தொகுப்பிலே, மொழி, திறன்விருத்தி, பண்பாடு, கலாச்சாரம், காதல், பேதங்கள், அறியாமை, தொண்மை, வீரம், போன்ற விடயங்களை மிக எளிமையான நடைமுறையிலே கையாண்டிருக்கிறார். இவ் முயற்சி மூலம் அனைவரிடமும் வாசிப்புத்திறனை ஊக்குவிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆகவே, மேற்படி கலைஞர் செ.கஜானனன் அவர்களுடைய முயற்சி மென்மேலும் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் என பெருகி, சிறந்த படைப்பாளியாக திகழ வேண்டும் எனவும் உலகியல் நன்மைக்காக பாடுபட வேண்டும் எனவும் இறையருளைப் பிரார்த்தித்து நல்லாசிகளும் வாழ்த்துக்களும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**சிவஸ்ரீ ந.பிரபாகரக்குருக்கள்**
பச்சிலைப்பள்ளி,
பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் புலோப்பளை கிராமத்தில் வசிக்கும் சகோதரன் செல்வராசா கஜானனன் அவர்களின் படைப்பாகிய வ(ளி)ழிதேடும் புல்லாங்குழல் என்னும் கவிதை தொகுப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தனது இளமைப்பராயத்திலேயே தனது எண்ணத்தில் உருவான உணர்வுகளை, அனுபவங்களை, கருத்துக்களை ஏனையவர்க்கும் படித்து சுவைக்க கவிதை முத்துக்களாக சிதறவிட்டிருக்கின்றார். வாழ்க்கையின் ஜதார்த்தங்களையும், தத்துவங்களையும், மெய்யறிவையும் மனித மாண்பின் மேன்மையையும், ஆன்மீகத் தேடலின் அவசியத்தையும் மனம் நெகிழும் விதத்தில் உணர்வுகள் ததும்ப, மெய் சிலிர்க்கும் வகையில் புரட்சிகரமாக கூறியிருப்பது அவரின் தேடலின் பெறுமதியை வெளிக்காட்டுகின்றது.

மேலும், கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் ஒவ்வொன்றும் அழகிய மொழிநடையில் அர்த்தம் நிறைந்த சொற்களால் இளையோடியிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

எனவே, இந்த சகோதரனின் முயற்சிகள் சகலதுறைகளிலும் மென்மேலும் சிறப்படைய இறைவனின் ஆசீரும் மரியன்னையின் பரிந்துரையும் நிறைவாக கிடைக்க ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்திரு.அ.சில்வெஸ்ரர்தாஸ்**
பங்குத்தந்தை,
தூய இராயப்பர் ஆலயம்,
புலோப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

சிறுபராயத்தில் இருந்தே பட்டிமன்றம், ஓவியம், பேச்சு, கவிதை முதலான துறைகளில் ஈடுபாடு கொண்ட பச்சிலைப்பள்ளி பகுதியைச் சேர்ந்த, புலோப்பளைக் கிராமத்தில் உதித்த இளம் கவிஞர் செல்வராசா கஜானனன் அவர்களின் கவிதைத் தொகுப்பிற்கு வாழ்த்துரை ஒன்றை வழங்குவதில் மகிழ் வடைகின்றேன்.

"வ(ளி)ழிதேடும் புல்லாங்குழல்" என்ற கவிதைத் தொகுப்பின் ஊடாக தமிழர்களின் வாழ்க்கை முறைமைகள், கிராமியக் கலாச்சாரங்கள், கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைகள், ஆரோக்கியமான உணவுப்பழக்க வழக்கங்கள் அனைத் தையும் தனது கவிதைத் தொகுப்பின் ஊடாக கோடிட்டுக் காட்டி இருக்கிறார் கவிஞர் கஜானனன்.

குழந்தைகளுக்கு அரிய பல கதைகள் கூறிய நிலாச்சோறு ஊட்டுகின்ற எமது முன்னோர்களின் அந்தப் பாரம்பரியத்தின் சுக அனுபவங்கள் பேசி மகிழக்கூடியவை. கருவில் இருக்கின்ற போதே பெற்றோர்களின் சம்பாசனைகளும் அவர்களின் சிந்தனைகளும் இக் குழந்தைகளின் மூளைகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுவிடுகின்றன. இவ்வாறு பிறந்த குழந்தைகள் சிந்திக்கக்கூடிய, உணரக்கூடிய காலம் வருகின்றபோது தமது மூளையில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஏற்கனவே தயார் நிலையில் உள்ள நிகழ்ச்சிக்கு அமைய செயற்பட முனைகின் றார்கள். என விஞ்ஞான ஆராய்ச்சி எடுத்துக் கூறுகின்றன. அந்த அடிப்படையிலேயே இவ் இளம் கவிஞரும் தனது தாய் தந்தையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன் பூட்டன் அனுபவித்த அக்கால பாரம்பரியங்களின் சுக அனுபவங்களை அவரின் மூளையில் பதிவேற்றம் செய்து அந்தத்தரவுகளில் இருந்து மீள் பதிவிறக்கம் செய்து கவிதை களை வடித்திருக்கின்றாரோ என எண்ணத் தோன்றுகிறது.

"தமிழிடம் ஒரு விண்ணப்பம்" என்ற கவிதையின் மூலமாக தமிழ் மீது இவருக்கு இருக்கும் பற்றும் காதலும் இலகுவாக உணரப்படுகின்றன. நட்பின் இலக்கணம், மொழித்தூய்மை, ஏமாற்றம், காமம், ஏக்கம், பெண்ணியம், எனப் பலவற்றையும் தொட்டுச் செல்லுகின்ற இக்கவிஞர் "ஓய்ந்து போனதோ என் உயிர் இராகம்.." என எம்.எஸ்வி யின் இழப்பை ஆதங்கத்துடன் வெளியிட்டிருப்பது இசை மேதையின் பால் கொண்ட இவரின் ஈடுபாட்டையும் எடுத்துக்காட்டுகின்றது. இவரின் படைப்புக்கள் இன்னும் பல வெளிவர வேண்டும். அதன் மூலம் இவரின் கவிதை நயங்களுடன் எடுத்துக்கூறும் பண்பும் இலக்கண மரபும் செழிப்படைய வேண்டும் என வாழ்த்தி, இவரின் தமிழ் பற்று மென்மேலும் ஓங்கி வளர எனது நல்லாசிகள் உரித்தாகுக.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்,
வடமாகாணம்.



15.10.2015 அன்று வெளியீடு செய்யப்பட்ட "கனவுகளின் புலர்வு" என்ற கவிதை நூலினை வடமாகாண முதலமைச்சர் கௌரவ.க.வி.விக்னேஸ்வரன் ஐயா அவர்களிடம் கையளிக்கும் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி தரும்"

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப விதி நமக்கு உதவ முடியாது போனாலும் முயற்சியானது நம் உடல் உழைப்பிற்கு ஏற்ற பலனைத் தரும்.

இப்பூமியிலே மானிடப் பிறவியில் பிறந்திட்ட நாம் எமது பிறப்பு முதலாக வாழும் காலம் வரையிலும் எவ்வாறு வாழ்ந்தோம் என்பதனை விட நாம் இவ் உலகின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் செய்திட்ட செயல்கள் எவ்வகையிலானது என்பதே இன்றியமையாதது.

இவ்வகையில் செல்வராசா கஜானனால் இயற்றப்பட்ட கவிதைத் தொகுப்புக்கள் "வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல்" எனும் பெயரில் வெளிவருவது பாராட்டத்தக்க விடயமாகும். இவரது கவிதைகள் சமூக பண்பாட்டு விழுமியங்களை சிறப்புற எடுத்துக்காட்டுவதுடன் இரத்தினச்சுருக்கமாகவும் உள்ளன. சிறு வயது முதல் பட்டிமன்றம், கவிதை, பேச்சு, பிரசங்கம் முதலான துறைகளில் பங்குபற்றி தனது ஆற்றல்களை வெளிப்படுத்திவரும் கஜானன் இவ் வருடம் மாவட்ட செயலகத்தின் கவிதைக்கான "இளைஞர் விருது" இற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜானனின் ஊக்கத்தினையும் விடாமுயற்சியினையும் பாராட்டி வாழ்த்துக்களை வழங்குவதுடன் "வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல்" சிறப்புற வெளிவர இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.சுந்தரம் அருமைநாயகம்**
மாவட்ட செயலாளர், அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வ(ளி)ழி தேடும் புல்லாங்குழலில் பூபாள இசை எழுக

இன்று எமக்குள் பலர் உள்ளத்தில் எழும் உள்ளுணர்வுகளை ஊமையாக்கி விடுகின்றனர். வேறுசிலர் அவற்றை தூங்க வைத்து விடுகின்றனர். ஆனால், ஒரு சிலரோ அவற்றை உயிருள்ள அற்புத படைப்புக்களாக்கி மக்களின் மனங்களிலும் வரலாற்று காலவோட்டத்திலும் பதிவு செய்து விடுகின்றனர். இத்தகைய ஒரு சிலரில் ஒருவர் தான் கவிஞர் கஜானன் அவர்கள் அவரின் சிந்தனை வீச்சுக்கு இக்கவிதைப்படையலான "வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல்" ஒரு அச்சாணியாகும்.

காற்றோடு கலக்கவிட்ட தன் சிந்தனைகளைச் சிறைப்படுத்தி இக்கவிதைக் கலசத்தில் இவர் பதிவுசெய்துள்ளார். தான் வாழும் சமூகத்தை நேசிக்கும் உள்ளத்தில் தான் இசையாக வந்திணைகிறது கவிதை. கவிஞனும் சமூகம் மீது கொண்ட நேசிப்பு கவிதைமயமாகப் பூசிக்கப்படுகின்றது. இன்று தமிழர் சமூகம் காற்றைத்தேடும், வாழ்வைத்தேடும், நல்ல பாதைகளைத் தேடும் நிலையில் அதன் வாழ்வியக்கம் வெற்றுப் புல்லாங்குழல்களாக நாதமற்றுக் கிடப்பது கண்கூடு. இதனைத் தான் கவிஞன் "வ(ளி)ழிதோடும் புல்லாங்குழல்" என குறிப்பினால் குறிகாட்டுகின்றான்.

"கவியுறும் உள்ளம் பிறரின் ஈனநிலைக்கண்டு துள்ளும்" என்பது பாரதியார் பாட்டு இதற்கு கவிஞர் கஜானனின் பின்வரும் பாட்டு ஓர் எடுத்துக்காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வீரத்தின் வடிவமடா தமிழன்**
**அவனை வீழ்த்துவதாயின்**
**உனக்கு வேண்டும்**
**விலை போகும் இன்னொரு தமிழன்"**

இவர் தனது கவிதைகள் பலவற்றில், போதும் என்ற மனதுக்கு மேலாக மோதும் பிரச்சினைகளை முன்வைக்கின்றார். அதற்கான தீர்வுகளையும் பின் வைக்கிறார். சதா காலமும் சமூகத்தின் மீதே கண் வைக்கிறார். இதனால் இவர் முன்னிற்கிறார். "பொற்காலம் எதுவோ பூவரசம் பூவே..." "அழிவுறு பண்பாடு மீளிர்வுற வேண்டுகின்றேன்..." என்ற கவிதைகள் இதற்குச் சான்றாகும்.

உள்ளததைச் சொல்வது தான் நல்ல கவிதை "மனிதம் செத்த மானிடரின் மனங்களை மாற்ற வழியுண்டோ" என்ற வரிகள் கவிதை என்பது உணர்த்துவது, உசுப்புவது எனும் வரைவிலக்கணத்தை மெய்ப்பிக்கின்றன. கல்லிலே கலைவண்ணம் காணும் சக்தி சிற்பிக்கு இருப்பது போல் கவிதையிலே உருகும் ஆசை எமது கவிஞருக்கு இருக்கிறது. அவரது வேட்கை தொடர வேண்டும். இன்னும் பல கவிதைகள் அவர் மூச்சுடன் சேர்ந்து வீச்சுடன் வெளிவர வேண்டும். இதற்கு இறைவனும் தமிழ் அன்னையும் அருள்புரிய இறைஞ்சு கின்றேன். தமிழ்க்கவிதை மாளிகையிலிருந்து "வ(ளி)ழிதேடும் புல்லாங்குழல்" தமிழ் சமூகத்தின் முன்இனிய கானம் இசைத்து நிற்க ஆசிக்கின்றேன். கவிஞர் வாழ்வு வளம் பெற வாழ்த்துகிறேன்.

"யாம் பூவரசம் கதியால்கள்
புதுப் புது வேர் பிறக்கும்"

**கௌரவ.சி.சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

உலகளவில், இன்னதுதான் இலக்கியம் என்னும் வரையறை தோன்றுமுன்பு, எழுதப்பட்டவை எல்லாம் இலக்கியம் என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவியது. சமயம், வரலாறு, நிலவியல், மருத்துவம் முதலியவையும் இலக்கியங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஏனெனில் இவை எல்லாமே செய்யுள் வடிவமாக இருந்தவைதான். இவற்றிலிருந்து சமயம் சார்ந்தவற்றை மட்டும் பிரித்து, ஏனையவை இலக்கியம் என்று கூறப்பட்டன. பின்னர் கற்பனையும், அழகியலும் சார்ந்தவை தனியாகப் பிரிக்கப்பட்டன. கற்பனைக்கும், உணர்ச்சிக்கும் ஒரு வடிவம் கொடுக்கும் நிலை ஏற்பட்டபோது அது இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலக்கியம் என்பது, "கூர் அறிவு படைத்த ஆண்களின் அல்லது பெண்களின் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும், நுகர்பவன் மகிழும்படி, முறைப்படுத்தி அமைப்பதே இலக்கியம்" என்றும், "இலக்கியம், காலக்கண்ணாடி" என்றும், "இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தின் வெளிப்பாடு. சமுதாயத்தில் விளைந்து, சமுதாயத்தை இயக்க வல்லது. ஒரு சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றல் பெற்றது" என்றும், "சமுதாயம் இலக்கியத்தின் பிரதிபலிப்பு" என்றும், "எது இலக்கியம் இல்லை என்று கூறுவது எளிது, எது இலக்கியம் என்று உணரலாமே தவிர உணர்த்த இயலாது" என்றும் இலக்கிய அறிஞர் பெருமக்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறிப்பிட்ட பின்புலம் அல்லது சூழல், ஒரு படைப்பு - அதாவது இலக்கியப் படைப்பு தோன்றுவதற்குரிய காரணமாக அமைகிறது. அதைப்போல, ஒரு படைப்பாளன் உருவா வதற்கும் ஒரு பின்புலம் காரணமாக அமையும். பாரதி உருவாகக் காரணமாக இருந்தது அவரது சமூக, அரசியல் பின்புலங்களே. எனவே, பின்புலம் என்பது படைப்பிற்கும் படைப்பாளனுக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

மரபுக்கவிதைகளிலிருந்து புதுக்கவிதை உலகிற்கு எம்மை வரலாறு நகர்த்திச் சென்றது. அங்கே கவிஞர்களின் உணர்வுகளுக்கு இலகுவழிகள் தீனியாகின. அவர்களின் பார்வை அகலப்படுத்தி ஆழப்படுத்தப்பட்டது. அதன்விளைவு புதுக்கவிதைகள் பொங்கிப் பிரவாகித்தன.

நிகழ்கால வாழ்க்கை நிலைமைகளையும், அதன் அடிப்பிறந்த வாழ்க்கை நோக்குகளையும் கருத்தோட்டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளையே நவீன கவிதை என்ற தொடர் குறிக்கின்றது. நவீன உள்ளடக்கத்திற்கேற்ப அதன் வடிவ அமைப்பிலும் சொற்கள், சொற்சேர்க்கைகள், ஓசை ஒழுங்கு, வெளிப்பாட்டு முறை போன்றவற்றிலும் - இக் கவிதை முறை பழைய செய்யுள் இலக்கியங்களிலிருந்து எவ்வளவோ மாறியுள்ளது என்பதையும் நாம் காண்கின்றோம்.

இன்றைய இளைஞர்களிடம் புதுக்கவிதைக்கான வீச்சும், விருப்பும் அதிகமாகக் காணப்படுகின்றது. இளைஞர்கள் தமது எண்ணங்களையும், உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் இலகுவாக வெளிப்படுத்தக்கூடிய இலக்கிய வழியாக புதுக் கவிதையைப் பார்க்கின்றனர்.

அந்தவகையில், பச்சிலைப்பள்ளிப் பகுதியை சேர்ந்த புலோப்பளை கிராமத்தை தனது பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர்.செ.கஜானனின் "வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தொகுதி வெளிவருகிறது. இவரின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. இவரது முதல் படைப்பான "கனவுகளின் புலர்வு" என்ற கவிதைத் தொகுதிக்கும் அணிந்துரை எழுதிய வன், நூலாய்வு செய்தவன் என்ற வகையில் இரண்டாவது கவிதைத் தொகுதி கண்டு அகமகிழ்கின்றேன். கவிதைத் தொகுப்பின் தலைப்பே ஆழப்படுத்திய தேடல்களை பறைசாற்றி நிற்கிறது.

தமிழர்களின் பண்பாடு மீதான அக்கறை, தமிழ்க்கலை, கலாசாரங்களின் மீதான ஈடுபாடு, தமிழ் உணர்வின்மேல் கொண்டுள்ள அழுத்தமான பிடிப்பு, காதல், காமம், வீரம், சோகம், போர் வடுக்கள் உரிமை, சுதந்திரம், சமூக நோவு என்று கஜானனின் கவிதைகள் பன்முகப் பரிமாணங்களாய் தெறித்து நின்று நமக்குச் சுவையூட்டுகின்றன.

ஒவ்வொரு இனத்துக்கும் தாம் பேசுகின்ற மொழியே தாய்மொழி. பலமொழிகளின் தாயே தமிழர்களாகிய நமக்குத் தாய்மொழி என்ற பெருமை நமக்குண்டு. அந்த அமுதத் தமிழ்மீது கஜானனின் பற்று கவிதைகளில் மிளிர்கின்றது.

தமிழர்களின் நேற்றைய வாழ்வினை அன்று பயன்பாட்டி லிருந்த மொழிவழக்கில் அழகாகத்தந்து, அந்த வாழ்வு மீண்டும் வரவேண்டும் என்று இந்த இளைஞன் "பழமை தேடும் இளையவன்" என்ற தலைப்பில் பேரவா கொள்வது ஆச்சரியத்தில் கண் உயர்த்த வைக்கிறது.

பாரதியின் வழியில் ஒரு குயில் பாட்டுப்பாடி எம்மை மகிழ்வித் திருக்கிறார். தாய்மையின் அர்ப்பணிப்புகளை அடுக்கி வைத்து என்னால் அது முடியாது என்று வருந்தும் கவிதை இரசிக்கும்படி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆள் தின்ற நிலம்" என்ற கவிதையின் இறுதி வரிகள்

**"வேரை அறுத்து விட்டு**
**வேளா வேளைக்கு**
**நீர் விடப்படுகின்றது**
**வெளி உலகப் பார்வைக்கு**
**வேரறுத்த கரங்களுக்கு புரியாது யாம்**
**பூவரசம் கதியால்கள் என்று**
**புதுப்புது வேர் பிறக்கும் என்று"**

ஆழமான கருத்தாழமும், கவிநயமும் கொண்ட கவிதை வரிகள். இது ஒன்றுபோதும் கஜானனை அடையாளப் படுத்துவதற்கு.

மூவின மக்களின் ஒற்றுமை பற்றி "மூவினமும் கூடி புதுநாடு அமைப்போம்" என்ற கவிதையில் அவரது அறிவு முதிர்ச்சி வெளிப்படுகின்றது.

"பொற்காலம் எதுவோ பூவரசம் பூவே" என்ற கவிதையில்

**"வீரம் அடக்கி**
**விவேகம் ஒடுக்கி**
**மானம் பறிபோக இன்று நாம்**
**மூடராய் வாழும் நிலை கொள்வதோ"**

என்று கோபம் கொள்ளும்போதும்

"மொழிச்சலவை" என்ற கவிதையில் தாய்மொழி மீது கொண்ட பற்றால் கவலைகொள்ளும் போதும்

**"உதட்டுக்கும் உள்ளத்துக்கும்**
**இடையில் கூட ஊழல் நிகழ்கிறது"**

"ஊழல்" என்ற கவிதையில் உண்மையை உரைக்கும்போதும் கஜானன் கவிஞராக வெளிப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை நயம் கூட்டி சந்தத்தோடு பெரிதும் சிறிதுமாக எண்பத்தைந்து கவிதைகளை துள்ளி விளையாடும் மனதிலிருந்து புள்ளிக் கோலங்களாய் கிள்ளித் தெளித்திருக்கிறார். நாம் அள்ளிப்பருகிச் சுவைத்திட. அநேகம் அருமை.

கஜானன் இன்னும் பல கவிதைத் தொகுப்புகளை வெளிக் கொண்டு வரவேண்டும். அவை நமது சமூகத்திற்கு பயன்பெற வேண்டும். சமூக அக்கறையால் புண்படும் நெஞ்சங்களின் ஓசையாக நம்மினத்தை பண்படுத்த வேண்டும்.

அச்சம் தாண்டி உச்சம் தொட எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**தமிழ்மணி.கே.கே.அருந்தவராஜா**
**(மேழிக்குமரன்)**
சின்னப்புதுக்குளம், வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

பிறக்கும் போது
அம்மணமாகப் பிறந்தேன்
இறக்கும் போது
புகழ் எனும் ஆடை அணிவேன்
எரிக்கும் போது
தமிழ் மணம் வீசுவேன்
சாம்பல் கரைக்கும் போது
கடலின் சந்தமாகுவேன்
மீண்டும் பிறக்கும் போதும்
அம்மணமாய்தான் பிறப்பேன்
இருக்கும் போது
தமிழ் சுரக்க கவி பாடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| தமிழே | 1 |
| பழமை தேடும் இளையவன் | 2 |
| அழிவுறு பண்பாடு மிளிர்வுற வேண்டுகின்றேன் | 5 |
| வாழ்வும் நதியும் ஒன்று | 7 |
| எச்சரிக்கை | 7 |
| குயில்பாட்டு | 8 |
| என்னால் அது முடியும் | 9 |
| வீரத்தமிழன் | 11 |
| பணமோகிணி | 11 |
| பலசாலி | 12 |
| மனிதமும் மாதிரிப் பொம்மைகளும் | 12 |
| காதலர் தினம் (2016) | 13 |
| அன்றும் இன்றும் | 14 |
| தமிழிடம் ஒரு விண்ணப்பம் | 14 |
| ஆள் தின்ற நிலம் | 15 |
| தோழமை | 16 |
| தமிழ்ச் சமூகம் | 16 |
| பொற்காலம் எதுவோ பூவரசம் பூவே | 17 |
| மொழிச்சலவை | 20 |
| தர்மம் | 21 |
| நிலவே | 21 |
| அப்துல் கலாம் | 22 |
| தை பிறந்தால் வழி பிறக்கும் | 23 |
| பாதை | 25 |
| சிறுவர் தின கொண்டாட்டம் | 25 |
| கொடிதிலும் இனிது | 26 |
| தேடல் | 26 |
| மாற்றம் | 27 |
| வரட்சி | 27 |
| ஏமாற்றம் | 28 |
| போர்க்குற்ற விசாரணை | 28 |
| காமம் | 29 |
| ஏக்கம் | 29 |
| பதில் | 30 |
| அன்னியம் | 30 |
| பெண்ணியம் | 31 |
| ஆவணப்படுத்துதல் | 32 |
| உணர்வுகள் | 32 |
| உரிமை | 33 |
| சுதந்திரம் | 33 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| புரிதல் | 34 |
| மாற்றம் | 34 |
| தியாகம் | 35 |
| வறுமையின் இனிது | 36 |
| வேட்கை | 36 |
| தோழனுக்காய் | 37 |
| எது கனவு? | 37 |
| கனா | 38 |
| திட்டாட்டம் | 39 |
| ஈழம் | 39 |
| இனவிருத்தி | 40 |
| எம் எஸ் வி | 40 |
| வழுக்கை | 41 |
| குரங்கு மனம் | 41 |
| பிரார்த்தனை | 42 |
| காதல் செய்யுதே | 42 |
| வழுக்கை | 43 |
| நா | 43 |
| (ஏ) மாற்றம் | 44 |
| கவலை | 45 |
| சாத்தியமற்றவை | 45 |
| தற்காப்பு | 46 |
| பீனிக்ஸ் பறவை | 47 |
| நியதி | 47 |
| பசி | 48 |
| ஊழல் | 48 |
| மாறுபாடு | 49 |
| விழிப்பு | 49 |
| மூவினமும் கூடி நாடு அமைப்போம் | 50 |
| தேவைகள் | 53 |
| அவள் யாரோ? | 53 |
| மென்மையின் வலிது | 54 |
| மரணிப்பு | 54 |
| வீதப் பிரதிபலிப்பு | 55 |
| தெய்வ பயம் | 56 |
| போலிகள் | 56 |
| அதிகாரம் | 57 |
| காதலும் கடந்து போ | 57 |
| அழிவின் ஆரம்பம் | 58 |
| நிலவாய் நீ வேண்டும் | 59 |
| நியதிகள் | 60 |
| புதுக்காதல் மரபு | 61 |
| பொக்கிசம் | 62 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழே

வல்லமை தாதமிழே-யான்
சொல்லிடும் கவிதைகள்
சோரம் போகாதிட
வண்ணமும் தா தமிழே-நான்
வடிக்கின்ற கவிதைகள்
உயிர்ப்புடன் துலங்கிட
எண்ணங்கள் தா தமிழே-என்
செந்தமிழ் போற்றிட
செழுமையுறக் காத்திடவே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழமை தேடும் இளையவன்

பருவ மழை தூவ
பாறை நிலம் பூக்க
பெரும் போகம் சிறு போகமாய்
பல மூடை நெல் விளைத்த
வரலாறுகளும் மறப்பதற்கில்லை
குளம் சூழ வயல்கள்
வயலோடு கோவில்கள்
பனங்கூடல் - பல
தென்னந்தோப்புக்கள்
இதமான இவ் ஊர் வளம் சொல்லும் - அது
அந்தக் காலம்

இசை சொட்டும் ஆர்மோனியம்
மனம் முட்டும் ஆவலில்
விழி பிதுங்க விழித்திருக்க
அரைச் சாமம் தாண்டியும்
அரங்கதிரும் கூத்துக்கள்
ஆடி முடித்த கால்களுக்கும்
பாடி முடித்த வாய்களுக்கும்
கோடி நன்றி கூறி
கூட்டம் கலையும்

பனங்கிழங்கு கிண்டி
பிளந்து காயவச்சு
உரல் நிறைத்து இடித்து
கரைவலைமீன், கணவாய்
நண்டு இறால் மரவள்ளி கிழங்குமிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிக் கூழ் காய்ச்சி
கூட்டுக் குடும்பங்கள் தோழரோடு
சூடு தணியமுதல்
வடலி ஓலை பிழந்து
ஊதி ஊதிக் குடிச்சு
ஊர்ப்புதினம் பேசையிலே
தேகமெல்லாம் சுகம் சேரும் - நல்ல
பாசமும் கூட வரும்

எண்பது வயசு தாண்டி எம்
பாட்டி பாட்டன்களை
கம்பு போல் திரிய வச்சது
அன்றுண்ட குரக்கனும்
ஒடியல் புட்டுமே அவர்
காணி நடுவிலே துரவெடுத்து
ஓடி ஓடிப் பட்டைகோலி
நீர் விட்டு வளர்த்த தோப்புக்களே
அன்றுவரை வளங்கூட்டி நின்றது
கலையோ விளையாட்டோ
கட்டுக்கடங்கா வீரமோ
துறை சார் போட்டிகள்
எது வாகிலும் - அடி
பணியாது முடிசூடும்
புகழ் கூடி
பளை ஊரார் பச்சிலைப்பள்ளியார் - என்று
பெருமையோடு பேசிக்கொள்ள
பெற்ற வயிறுகள் குதூகலிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டுப் பாடி தூங்க வச்சும்
சோறூட்டும் போதெல்லாம்
வீரமும் விவேகமும் ஊட்டும்
தாய்மார்கள் மரபின்று
பூச்சாண்டி வருகுதென்றும்
பூச்சி வருகுதென்றும்
ஆச்சி பிடி அப்பு பிடி என்று
பசிபோக்க உணவூட்டும் போதெல்லாம்
பயத்தையும் ஊட்டுவதேன்??

பாம்புக் கடியோ பல
விசக் கலைப்போ
ஆயள்வேத மருந்தோடு பொன்னர்
பார்வை பார்த்தா போதும்
விசம் பஞ்சாகிப் பறந்துவிடும் - அன்று
கூடிய கலைகளெல்லாம்
இன்று ஏன் ஒடுங்கிப்போச்சு

கவிபாடவே கண்கள் பனித்து
மனம் கலங்கலாச்சு மீண்டும்
மாறுமா என்ற கேள்வியோடு
மாற்றமுறச் செய்வோம் வாரீர் வாரீர் - என
வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவுறு பண்பாடு மிளிர்வுற வேண்டுகின்றேன்

விரிந்த வானே
பரந்த பாரே
விரைந்து வாருங்கள் - என்
நிறைந்த சோகம்
மறைந்து போக வழி
மொழிந்து செல்லுங்கள்

தெருக்கள் எங்கும் மதுசாலை
தரித்து நிற்கும் மதுப்பிரியர்
உழைப்பும் உடலும் அழித்திடவே
முனைப்புக் காட்டும் நிலைபாரும்
சிகரட் வியர் சாராயம்
கசிப்பு பீடி கஞ்சாவும்
பெருக்கி வைத்த சீர்கேட்டை
அகற்ற ஏதும் வழியுண்டோ?

உழைக்க வழிதேடா ஒரு கூட்டம்
பிறர் பிழைப்பை கெடுக்கும்
இன்னொரு கூட்டம்
காதல் என்ற போர்வையிலே
கற்பை தொலைக்கும் மறு கூட்டம்
கூட்டங்கள் கூட்டி மோதல்கள்
கொலைகளும் புரிந்து கும்மாளங்கள்
காட்டமாய் போகும் இந் நிலை பார்த்து
கதறிக் கண்ணீர் விடும் பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைகள் என்ற பெயர் மட்டும்
அரைச்சாண் ஒரு சாண் அணி துணிகள்
காமுகர் பலரை தோற்றுவிக்க - இக்
கவர்ச்சி உடைகளும் காரணமே
காதல் என்ற புனிதத்தை
கழங்கப்படுத்தும் தற்கொலைகள்
காலங் கெட்டுப் போனதுவோ? அன்றி
கலாசாரம் கெட்டுப் போனதுவோ?

மனிதம் செத்த மானுடரின்
மனங்கள் மாற்ற வழியுண்டோ?
புனிதம் மாண்டு போகையிலே
புலன்கள் மீண்டு ஒளி பெறுமோ?
மறைந்த எங்கள் பண்பாடு மறு
மலர்ச்சியுற்று மிளிர்ந்திடவே
விரைந்து வந்து வழி கூறும் - இப்
பரந்து விரிந்த பார் வானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வும் நதியும் ஒன்று

மேடு பள்ளமுண்டு
வளைவு சுழிவுண்டு
வற்றி வரள்வதுண்டு
வழிந்து புரள்வதுண்டு
இப் பாரில்
வாழ்வும் நதியும் ஒன்று

## எச்சரிக்கை

படி தாண்டும் கலாசாரம்
பாழடைந்து போனது நம் இனம் - இதில்
ஆண்கள் நடக்கிறார்கள்
பெண்கள் பறக்கிறார்கள்
அன்னியக் கலாச்சாரம் நோக்கி
சிந்தையில் கொள் தமிழா
இல்லையேல் நாளை உன்
சந்ததி மானமும் பறிபோகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயில்பாட்டு

பாடு குயிலே பாடு
பாலர் மகிழ பாடு
கூடி ஆடப் பாடு
குழைந்த தமிழில் பாடு

பிஞ்சு வயசில் பாலரெல்லாம்
பள்ளி செல்ல பாடு
பிறர் துன்பங் கண்டு
நாங்களும் அதில்
பங்கு கொள்ளப் பாடு

அன்பு செய்யப் பாடு
அகிலம் உய்யப் பாடு-உன்
குஞ்சுகளை காக்கை கூட்டில்
வளர்க்கும் திறனை பாடு

நன்மையாவும் பாடு
நரிகள் ஓடப் பாடு
கருமைக்குள்ளும் இனிமையுண்டு
உலகமறியப் பாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னால் அது முடியும்

மணம் முடித்த நாள் முதலாய்
மருமகளாய் மனைவியாய்
அர்ப்பணிப்புக்களை
சொந்தமாக்கியவள் நீ
என்னால் அது முடியாது

மகவு என்னை சுமக்கும்போது
அடி வயிற்றில் நான் கொடுத்த உதைகளை
அப்படியே பொறுத்து
வலி கடந்து பிரசவித்து என்
பிஞ்சு முகம் பார்த்து
நெஞ்சம் குளிர்ந்து நகைத்தவள் நீ
என்னால் அது முடியாது

அல்லும் பகலும்
அயராது கண்விழித்து-உன்
செங்குருதியை பாலாய்ச் சுரந்து
என் பசி போக்கியவள் நீ
என்னால் அது முடியாது

ஐந்து வயசுவரை
நான் செய்த அசிங்கங்களை
அலுப்பேதுமின்றி அகற்றி
இன்முகம் காட்டி
முத்தமழை பொழிந்தவள் நீ
என்னால் அது முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதூட்ட முனையும் உன்னை
அலையவிட்டு நான் குறும்பு செய்தும்
கொஞ்சமும் சலிக்காது
என் பசி போக்கி மகிழ்ந்தவள் நீ
என்னால் அது முடியாது

உன் சுகம் பாராது
உன் பசி பாராது
என் சுக நலன் வேண்டி
என்நாளும் இறை சன்நிதி நாடுபவள் நீ
என்னால் அது முடியாது

இன்று உன் மருமகட்கும்
அவர் தம் மகட்கும்
மறுபடி நீ தாயாகி விட்டாய்
என்னால் அது என்றுமே முடியாது தாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரத் தமிழன்

இன்று தமிழனுக்காய்
தனி நாடும் இல்லை
தமிழன் இன்றி
ஒரு நாடும் இல்லை
வீரத்தின் வடிவமடா தமிழன்
அவனை வீழ்த்துவதாயின்
உனக்கு வேண்டும்
விலைபோகும் இன்னொரு தமிழன்

## பணமோகினி

உன்னவள் நானென்றே
உள்ளம் புகுந்தவள்
என்னவள் இவளெனும் முன்
ஏமாற்றி அகன்றவள்
பணம் காணாப் பதராகி
பாசம் தொலைத்தவள்-நாளை
வெளிநாடும் செல்லுவாள் வேசமிட்டு
இன்னும் எவர் வாழ்வை தொலைக்கும்
எண்ணமுளதோ? இறைவா
நிலையில்லா இவ் வாழ்வில்-உன்
படைப்புக்களை எல்லாம்
நிஜம் நோக்கி வழி நடத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலசாலி

பணம் பலமன்று
பதவி பலமன்று
வீரம் பலமன்று
விவேகம் பலமன்று
உன் பலம் எதுவென்றால்
எங்கும் தோழமை கொண்டு
எவன் ஒருவன் வாழப் பழகுகிறானோ
அவனே பலம் வாய்ந்தவன்

## மனிதமும் மாதிரிப் பொம்மைகளும்

உயிரற்ற சிலைகள்
உடை தரித்து உயிரோட்டமாய்
உயிர் பெற்ற மனிதமோ
உடைகளின்றி தெருவோரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் தினம் (2016)

காதலர் தினமன்று
கன்னிப் பையன் நான்
கவி எழுத அமர்ந்தேன்
முடுக்கி விட்ட வானொலி
முடக்கியது என் கவித்துவத்தை
மாசி-14
ஒன்பதாயிரம் இளம் பெண்கள்
கற்பை தொலைக்கிறார்கள்
நான்காயிரம் விடுதிகள்வேறு
முற்பதிவில்
இலங்கை நிலையே இதுவாகில்
உலக நிலை எதுவோ? மனிதா
காதலை களங்கம் செய்யாது
கனிவோடு அதன்
புனிதம் காக்க முயல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றும் இன்றும்

அன்று புனிதர்களின் காவலிலே
மனிதர்களாய் இருந்தோர்-இன்று
கயவர்களின் கால் வருடி
காம வெறியர்களாய் அலைகின்றனரே

## தமிழிடம் ஒரு விண்ணப்பம்

என்னவளே-உன்
எழில் அழிய
எள்ளளவும் நான்
இடமளியேன்
செம்மொழியே
செந்தமிழே
செங்கரும்பே
உன் சுவையே
சங்கம் பல கடந்தவளே-யான்
சாகும்வரை எனை நீங்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள் தின்ற நிலம்

பனை தென்னம் கூடல்
பரந்த வானம்
அகன்ற சமுத்திரம்
ஆள் தின்ற நிலம்
மறந்த சோகம்
மாறாத வடுக்கள்
நிறைந்த தியாகங்கள்-இன்று
நிர்க்கதியாய் நாங்கள்

புலர்வின் திசை தனிலே
மலர்வின் வாசம் நுகர்கையிலே
புயல் வந்து இருட்டடிப்புச் செய்தது
பூக்கள் எல்லாம்
காம்பொடிந்து கருகிப் போனது-இன்று
அச் செடிகளின் அடியிலே
சிறு தழைகள் மட்டும்
மகரந்தச் சேர்க்கைக்கு கூட
மலர்கள் இல்லை
மலர்வோம் என்ற நம்பிக்கையும்
செடிகளுக்கில்லை

வேரை அறுத்துவிட்டு
வேளா வேளைக்கு
நீர் விடப்படுகிறது
வெளி உலகப் பார்வைக்காய்
வேரறுத்த கரங்களுக்கு புரியாது-யாம்
பூவரசம் கதியால்கள் என்று
புதுப்புது வேர் பிறக்கும் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோழமை

புகழ்ந்தோரை ஏற்றியதுமில்லை
இகழ்ந்தோரை தூற்றியதுமில்லை
புறங்கூறி மகிழ்ந்தோரை
தாக்கியதுமில்லை
உளம் நெகிழ்ந்து யான் போற்றுவது
நேர் நின்று மார் பிழக்கும் எதிரியை
நேசமொடு தோழ் கொடுக்கும் தோழமையை

## தமிழ்ச் சமூகம்

தாராள தவணைக்கு
தலைக்குமேல் கடன்பட்டு
தனிக் குடித்தனத்தில்
தணியாத மோகமுற்று
தீராத நோய்களை எல்லாம்
ஏராளமாக வரவேற்று
மின் விசிறி குளிரூட்டி
வித விதமாய் உந்துருளி
மோட்டார் கார் வாகனங்களென்று
நமம் தமிழ் சமூகம்
என்னமா முன்னேறுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்காலம் எதுவோ பூவரசம் பூவே

நெஞ்சம் கனக்கிறது
நெடுங்கால முந்தைய
தமிழ் மரபெங்கு வாழ்கிறது?
அச்சம் தவிர்த்து
ஆண்மையை போரில் வீரத்தில் நிலைநாட்டி
உச்சமாய் நம் பண்பாடு போற்றி
அருஞ் சிற்பமாய் மிளிர்ந்த
அக்கால வாழ்வெல்லாம்
ஆழக் குழியூடு அந்தரித்து வீழ்கையிலே
மானத் தமிழன் எனில்
உன் மனமும் துடிக்குமடா

வாயில் புகையோடும்
கசிப்பு பீடி கஞ்சா மாவா என்று
பாதிக்குமேல்
போதை விழுங்கிய பூமியிலே
பேதையரை ஈன்ற பெற்றோர்
போதுமடா இவ் வாழ்வென்று
சாகும் நிலை கொள்ளும்
சபிக்கப்பட்ட வாழ்வாகிப் போனதுவே

அற்ப சுகத்துக்காய்
அரும்பெரும் மானம் பிடுங்கி
மங்கையரில் இச்சை தணிக்கும்
ஈனர்களே-உமை
மொத்தமாய் ஒழிக்க ஓர்
சட்டம் வராதா என்று-என்
சாவிலும் இறுதி வேண்டுதலாய்
விண்ணப்பிப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தநாள் பிறந்த பெண்மகவின்
அங்கத்தைக் கூட
ஆசையுடன் நோக்கும் நீசர்களும்
கொஞ்சமும் வயசு வேறுபாடின்றி
நெஞ்சிலே காமம் கோர்த்து
பிஞ்சுகளை வேட்டையாடும்
நரிக் கூட்டமும்
நல்ல பாடம் கொள்ள வேண்டும்-அப்பனே
வேதனையில் கூட விழையும்
அக்கால நினைவுகளின் நீட்சியிலே
லயித்துப் போகிறேன்

அக்காலம் அது ஒரு பொற்காலம்
இக் காலம் மட்டுமல்ல
எக்காலமும் மறவாத
எந்தையர் மானம்
கொடி கட்டி பறந்த காலம்
மறைப்பிற்காய் இன்று பல
மதில்கள் உண்டுதான்-ஆனால்
மானம் பறி போகிறதே

அன்றிருந்த உயிர் வேலிகள்
கொண்டிருந்த உறுதியிலே
தற் கொலைகள் இல்லை
தறி கெட்ட வாழ்வில்லை
தனிமையில் எங்கும் செல்ல பயமும் இல்லை
நான் பொய் உரைக்கவும் இல்லை
பூவரசம் பூவே புதுப் பரணிபாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடங்கள் தரித்து
வேலிகளை தறித்து
மாடங்களில் குடியேற்றி
மனச்சலவை நடக்கிறது-அன்று
பாவங்கள் விழைத்த-பல
வன் கரங்கள் உணரட்டும்
என்றோ ஓர் நாள்-இப்
பாவங்களுக்கெல்லாம் நல்ல
பாடங்கள் கிடைக்கும் என்று

வீரம் அடக்கி
விவேகம் ஒடுக்கி
மானம் பறிபோக-இன்று நாம்
மூடராய் வாழும் நிலை கொள்வதோ?
பூவரசம் வேலிகளே-உம்
பூ முகரும் பொற்காலம்
என்று தோன்றும்?-அன்றுதான்
நம் மானம் நிலை கொள்ளும்
புது வாழ்வு தோன்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிச் சலவை

அம்மா என்ற அழகு தமிழ்
மா.மம். மம்மி என்றானது
அப்பா என்ற அரும் பெயரும்
பா. டாட். டாடி என்று
மட்டமாக முடிக்கும் மரபு-இன்று
கலாச்சாரமாய் போகிறது

எப்போதடா இந்த
ஆங்கிலம் வந்தது?
முத்தான தமிழில்
மொழிய மனமின்றி
பிற மொழியை
கட்டாயக் கடன் பெற்று வந்து
கலந்து விட்டீரோ எம்
கனிவான மொழிதனிலே

கல்தோன்றி மண்தோன்றி
கடல் தோன்றா கால
முன் தோன்றிய மூத்த தமிழல்லோ-பாவம்
நம் வாய் நுழைந்து
முக்குளித்து முனகுகிறது
முடிவு நோக்கி விரைகிறது-நம்
தாய் மொழியல்லோ
தடுத்திட வேண்டுமல்லோ
சற்றேனும் சிந்தியுங்கள்
பிற மொழியை கல்லுங்கள்
கலக்காதீர்கள்
என் தமிழ் உறவுகளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மம்

கருமங்கள் யாவையும் சரிவரச் செய்
கடமைகள் யாவையும் பிழையறச் செய்-அன்று
தர்மம் தலை தூக்கும்
தரணியில் வளம் கூடும்
மனிதம் உயிர்வாழும்-எங்கும்
மகிழ்ச்சி தழைத்தோங்கும்.

# நிலவே

எட்ட முடியாத உயரத்தில் நீயும்
கிட்ட முடியாத துயரத்தில் நானும்
காதலித்த கவிஞர்களை எல்லாம்
களட்டி விட்டு-இன்னும்
யார் வருகைக்காய்-உன்
அழகு கூட்டுகியாய்
வெண்ணிலாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல்கலாம்

கனவுகளின் நாயகன்
கவிதைகளால் வடித்தும் முடியாத
கலாம் அவர் புகழ் வாழ்வு
சாதிப்பின் சிகரம்
சரித்திரத்தின் ஆத்ம பொருள்-எவரும்
பாதிப்புறாது வாழ்ந்த செம்மல்

விஞ்ஞான விற்பன்னர்
எந் நாளும் எளிமையை
அணியாக்கி வாழ்ந்தவர்
பன்நாடும் அறிந்த மனிதம்-இன்னும்
பல காலம் வாழ்வாரென மகிழ்ந்திருக்க
தன் ஆசை போலவே உயிர் பிரிந்தாரே
துடி துடிக்கிறது மனசு
இந்திய இமையமே
இதயமே உம் இழப்பு
உலகப் பெரு இழப்பே
இனம் சாரா மதம் சாரா
மொழிசாரா வாழ்வாய்
இனிதாக வாழ்ந்த கலாம்
காலத்தால் அழியாத பொக்கிசமாய்-நம்
மனங்களுடு இன்னும்
பல காலம் உயிர்வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை பிறந்தால் வழி பிறக்கும்

தமிழுக்கு தை ஒன்று
அன்றுதான்
தைத் திருநாளும் உண்டு
தரிசு பட்ட தாய் நிலத்தை
உழுது பிளந்து
பசுமை போர்த்து-நம்மவர்
பசியையும் போக்கும்
உழவர் குலம்-தம்
அகம் குளிர்ந்து படையலிட்டு
கதிரோன் வரம் போற்றி மகிழும்
திருநாளிது

வாசலிலே மாக்கோலம்
வீடெல்லாம் விழாப் பூணும்
குருத்தோலை தோரணங்கள்
கரும் பச்சை மாவிலைகள்
மங்களம் சுரக்கும்
மண்ணுக்கு உயிர் கொடுத்து
மட் பானைகள் அமைத்து
உலையிட்டு அடுப்பில் வைத்து

திங்கள் பார்த்து
பொங்கலோ பொங்கலென்று
ஒரு சேர குதூகலித்து
வெடி வெடித்து
இனிதான சக்கரையும்
இதமாக பயறும் இட்டு
பதமாக வர இறக்கி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலை வாழை இலை பறித்து-அதில்
சர்க்கரை பொங்கலிட்டு
சாற்றுடன் கரும்பொடித்து
பாலுடன் பழமும் சேர்த்து
வாகாய் இலை நிறைத்து-பின்
படையலிட்டு பகலோனை துதித்து
கால ஓட்டத்திலே
கலாசார நீட்சியிலே
தனி வாழ்வு தேடிடும்
நிகழ்கால மனிதம் கூடி
மீண்டும் கூட்டுக் குடும்பமாய் இணையும்
குதூகலமான காட்சியும்
அன்றுதான் நிகழும்

நன்றி மறந்த மனிதரெல்லாம்-இந்
நன்றி கூறும் திருநாள் கண்டு
மாற்றம் பெற
பொலிவு பெற்று நம் நாடு
புதுமையுற்று நடை போட
புலர்வு நோக்கி புது ஆண்டில்
பூரித்து நடை பயிலும் திரு நாள்
தை பிறந்தால் வழி பிறக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதை

உங்கள் மீழாத தாகங்களை
நீளாது பார்த்துக் கொள்ளுங்கள்
நீண்டு மாண்டுபோன-அத்
தாகத்தை பாடமாய் கொண்டு
கூறுகின்றேன்
கூட நின்றே குழி பறிக்கும்
கூட்டங்களும் கூடி உலவுதலால்
பார்த்து நடவுங்கள்
பாதாளங்கள் தோண்டப்பட்ட உம் பாதை தனிலே.

## சிறுவர் தின கொண்டாட்டம்

இன்று முழுக்க
போலிக் கொண்டாட்டம்
நாளை புலர்ந்தால்
அவன் நிலையோ
திண்டாட்டம் பந்தாட்டம்
ஏன் இந்த பொய் நாடகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிதிலும் இனிது

எந்த ஒரு நிமிடம்
மிகக் கொடிது என்றால்
தன் மனையாளின்
பிரசவ வலிக் கதறலை-அவள்
அன்பான கணவன்
துடி துடித்து கேட்பதென்பேன்
எந்த ஒரு நிமிடம்
மிக இனிது என்றால்
நினைவு திரும்பும்
அத் தாயானவள்
தான் பிரசவித்த குழந்தையின்
முதல் அழுகையை
கேட்டுக் கேட்டு மகிழ்வதென்பேன்.

## தேடல்

கானல் நீரில்
மீனைத் தேடுவது போலாகிறது-இப்
பாவ உலகில்
உண்மைக் காதலரை தேடுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றம்

நாளை இந்த உலகமெல்லாம்
ஏழை கையில் மாறவேண்டும்
மாய வலை மீண்டு
மனித குலம் வாழவேண்டும்
புதுமை பெற்ற காதலெல்லாம்
முதுமைவரை நீளவேண்டும்-இந்த
புரட்சி மாற்றம் எல்லோரது
மனங்களிலும் தோன்ற வேண்டும்
இன்றே நம் சனங்கள் மாறவேண்டும்

## வரட்சி

வரட்சியால் உணர்ச்சி இழந்த
நிலத்தாளின் மேனி குளிர
மழைதத்துளி தூவ மறந்தாயோ
வண்ண முகிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமாற்றம்

மாயம் செய்தே காதல் செய்தாய்
காதல் செய்தே காயம் செய்தாய்
காயம் செய்தே மோசம் செய்தாய்
மோசம் செய்தே வேசம் செய்தாய்
வேசம் செய்தே என்னுள்
வாசமும் செய்துவிட்டாய்-என்
பாசமறியா பதரே
இனி என்னுள் நாசம் செய்ய
என்ன இருக்கிறது?.

## போர்க்குற்ற விசாரணை

இந்த நாடகம்
அந்த மேடையில்-இன்னும்
எத்தனை ஆண்டுகள் நீளுமோ?
அந்த ஆண்டுகள்
தந்த வேதனை-இனி
எந்த ஆண்டுதான் தீருமோ?.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காமம்

உடலை அறுத்து கொன்று
உயிரை சுவைத்து மென்று
உறவை வெறுத்து சென்று
உணர்வை தொலைத்து நின்று
உலவுது உலகினில் காதல் இன்று.

## ஏக்கம்

கொடி கட்டி வாழ்ந்த
தமிழ் மரபு-இன்று
குடி கெட்டுப் போகிறதே என்ற
விடிவற்ற வலியோடு
விடையற்று தொடர்கிறது-இக்
கவிப் பயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதில்

பொன்னை விற்று
பொருளை விற்று
பெண்மை விற்று
பெருமைகளை விற்று
உண்மை விற்று
உடமைகளை விற்று-இன்று
உம்மை விலைபேசும்
தென்னிலங்கை சந்தைகட்கு
என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்
வெள்ளை வேட்டிகளே?

## அன்னியம்

மொத்த மேனியிலும்
இரத்தம் படிந்த சப்பாத்து தடங்களும்
தென்னிலங்கை குடியேற்றங்களுமாய்
அத்துமீறல்களை வெளிக்காட்டி
அந்தரித்து நிற்பதனால்-உனை
எப்படி நான் முத்தமிடுவேன் தாய்நிலமே?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம்

என்னடி பொன்னம்மா
பாரதி கண்ணம்மா-நீ
போவது எங்கம்மா
பேதையே சொல்லம்மா
ஆனது ஆச்சென்று
ஐயங்கார் சொன்னப்போ
மூலையில் போத்திண்ணு
மூளியாய் இருந்தாயே
பாரதி பாடாட்டில்
பாவியர் மாறுவரோ?

கூறடி கண்ணம்மா-உன்
குலப் பெருமைகளை
சாலையிலே போகையிலே
சேலை கட்டி தலை நிறைய பூ வச்சு
கால் கொலுசு கலகலக்க
கண்ணிரண்டும் அடி நோக்க
நாணமொடு முகம் சிவக்க
நளினமொடு இடை அசைய
நடை பயின்றதுவும்
மானமென்று வரும்போது
பாயும் புலியாகி-பல
நாய்கள் கதை முடித்ததுவும்
இன்றோ ஏன் இந்த பொய் வேசம்
உன் பண்பாட்டில் கொள்
முழு விசுவாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணப்படுத்துதல்

அன்று தாய் நிலத்துக்காய் உழைக்க-நான்
வயசுக்கு வரவில்லை
இன்று வயசுக்கு வந்துவிட்டேன்-ஆனால்
தாய் நிலம் எம்மிடமில்லை அதனால்
சேர்த்து வைத்த உணர்வுகளை எல்லாம் கோர்த்து
காத்திரமாய் பல கவிகளாய் வடிக்கிறேன்
நாளை என் பேத்திகளும் பேரன்களும் படிக்க.

## உணர்வுகள்

என் காதல் ஆழம் என்னவென்று
வீசும் காற்றுக்கு தெரியும்
மூச்சிழுக்கும் நேரமெல்லாம்
நாசியூடு உள் நுழைந்து
செல்கள் முழுதிலும் அடைத்து நிற்கும்-என்
தேசக் கனவுகளை நாளை
மாற்றம் காணுமா என துடிக்கும்
ஏக்க உணர்வுகளை எல்லாம்
கண்டு வருவதனால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமை

பேச்சுரிமை இழந்து
வாழ்வுரிமை இழந்து
வாழும் நம் இனத்திற்கு
வாக்குரிமை மட்டுமே
எஞ்சியிருக்கிறது-அந்த
வாக்குரிமையையும் எம் இனம்
மறந்திருக்கிறது
வாக்களியுங்கள் உறவுகளே-நம்
உரிமைகளை வென்றெடுக்க
வாய்ப்பளியுங்கள்.

## சுதந்திரம்

சிரிக்க நினைக்கிறாயா
சிரித்துவிடு
அழ நினைக்கிறாயா
அழுதுவிடு-உன்
மொத்த உணர்வுகளையும்
உள்ளத்துள் புதைத்து
மௌனித்து அலைவதனால்தான்
இன்றுவரை ஒரு இனமே
அடிமைப்பட்டு கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிதல்

காதல் என்பதுகெட்ட உணர்வல்ல
பெற்றவரே-அது நம்
மொத்த மனங்களையும் தொட்ட உணர்வே
முதலில் உம் பிள்ளைகளை
புரியுங்கள் பின் புரிய வையுங்கள்
அறிந்ததில் உம் பிள்ளைக்கு
உகந்த துணை அதுவல்ல
என்றறிந்தால் அன்பாகவே பிரியுங்கள்
உயிர்களை அல்ல
உணர்விலே உறைந்தஅக் காதலை
இனியாவது தோழமையாய் பழகுங்கள்
பரம்பரை சிறக்க முயலுங்கள்
இம் மாற்றம் வேண்டி இன்றே விரையுங்கள்.

## மாற்றம்

அனாதை விதவை தபுதாரன் ஏழை
இவை நான்கும்-நம்
ஆகராதி விட்டே நீங்கவேண்டும்
ஆந்த அழகான வாழ்வு
விரைவில் தோன்றவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகம்

நேற்றைய போரிலே
தந்தையை இழந்து
இன்றைய போரிலே
துணைவனை இழந்து
நாளைய போரின்
போர்ப்பறை கேட்டு-தன்
மைந்தனையும்
செங்களம் அனுப்பத் துணியும்
வீரத் தமிழ்த் தாய்கள் வழி வந்த-நம்
ஈழத் தமிழ்த் தாய்மார்களின்
தியாகங்களை நினைத்துப் பார்க்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையின் இனிமை

புட்டியிலே செவிலி பாலூட்ட
கொச்சை ஆங்கிலத்தில்
கொஞ்சல் மொழி கேட்டு
தங்கத் தொட்டிலில்
தக தகத்து தூங்கும்
செல்வக் குழந்தையர்க்கு கிட்டுமோ
ஏழைத் தாயின் சேலைத் தூழியிலே
தாலாட்டு கேட்டு தமை மறந்து
தூங்கும் சுகம்?.

## வேட்கை

வேலியிலே காயவைத்த
ஈரத் துணிகளின்
நீர்த் துளிகளை மென்று
தாகம் தணிக்கின்றன
கதியால்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோழனுக்காய்

எல்லையில்லா இன்பம் முழுவதும்
எனக்குள் உதிர்ந்து
உனக்குள் மலரட்டும் தோழா
சோகங்களை முழுமையாய்
தாங்கிப் பழகிவிட்ட எனக்கு
தோழ் கொடுக்க
தோழன் நீ உள்ள
சுகம் மட்டும் போதுமடா
நான் காலம் முழுவதும்
மகிழ்வோடு வாழ்ந்திருக்க.

## எது கனவு?

கண்ணுறங்கி காண்பது கனவல்ல
கனவென்பது
இலக்கோடு வாழும் ஒருவன்
தன் இலட்சியத்துக்காய்
விழித்திருந்து காண்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனா

குணமகளாய்-என்
குல மகளாய்
வறுமைப் பிடியினிலே
வாடி வளர்ந்தவளாய்
தனிமை வெறுமைகளை
தாண்டி மலர்ந்தவளாய்
இழப்பு இறப்புக்களை
இளமையில் கடந்தவளாய்
இருந்தும் இனியவளாய்
கோதை ஒருத்தியை-என்
ஆயுள் முழுவதும் அவள்
சோகம் மறந்து வாழ-நான்
காதல் மனைவியாக்கி
காலம் முழுவதும்
கனிவோடு வாழவைக்கும்
ஆழ்ந்த கனவொன்று கண்டேன்
அடடா ஆனந்தம் கொண்டேன்
அழகான அக் காதல் வாழ்வை எண்ணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்டாட்டம்

ஒரு வேலை கிடைக்கவேண்டி
கோவிலுள் கும்பிடப் போனேன்
வாயிலில் ஒரு வேளை உணவு வேண்டி
என்னை ஒருவன் கும்பிடுகிறான்
பாவம் கடவுள் என்ன பண்ணப்போறான்?.

# ஈழம்

வஞ்சகர் கூடி இயற்றிய சதியில்-தன்
குஞ்சுகள் காக்க
நெஞ்சினில் வலியும்
இறக்கையில் வடுவும் சுமந்து
மிஞ்சிய ஆயுளையும் -தன்
குஞ்சுகளுக்காய் அர்ப்பணிக்கும்
நெஞ்சுரம் கொண்ட
தாய்ப் பறவைகள் வாழும்
கனவு நாடெங்கள் ஈழமல்லோ?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவிருத்தி

பெற்றவர் முகமறியா யனனம்
உற்றவர் உறவறியா பயணம்
செத்தவர் போக மற்றவர் புரியும்
வாழ்க்கை போராட்டம்-ஓர்
இன விருத்திக்கான அடையாளம்.

## எம் எஸ் வி

ஒய்ந்து போனதோ -உன்
உயிர் இராகம்?
காய்ந்து போனதே -நம்
இசை தேசம்
மெல்லிசை மேதையே
உன் இசை கேட்க
கோடி காதுகள் தவம் கிடக்கின்றன
மறுபடி பிறந்துவிடு
மீண்டும் இசை மழை பொழிந்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழுக்கை

இள வட்டம் தலைகளிலே
முழு வட்டம் முக்கா வட்டம்
முடிவின்றி தொடருதடா-இந்த
மொட்டைவிழும் வாழ்க்கை வட்டம்.

## குரங்கு மனம்

மகிழ்ச்சி வரும் தருணம்
வாழ்வின் நீட்சிக்காய் வேண்டுவதும்
விரக்தி வரும் தருணம்
வாழ்வை முடித்துக்கொள்ள வேண்டுவதுமான
மனித குணத்தின் தன்மையால் தான்
இறைவன் குரங்கு மனத்தை படைத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

கவி தந்த தமிழே
தமிழ் தந்த கலையே
கலை தந்த உறவே
உறவு தந்த இறையே
இறை தந்த வரமே
வரம் தந்த நிறைவே
என்றும் தொடர்கவே.

# காதல் செய்யுதே

தொடாமல் தொட்டுப் போகும்
மூச்சுக் காற்றைக் கேள்
படாமல் பட்டுப் போகும்
நீண்ட கூந்தல் கேள்
சொல்லாமல் காதல் சொல்லும்
காந்த விழியை கேள்-என்னைச்
செய்யாமல் காதல் செய்யுதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தையம்
ஓடிட்டே இருப்பவன் ஜெயிக்கிறான்
ஓட மறுப்பவன் தோர்க்கிறான்
ஓடுங்கள் உறவுகளே
குறுக்கு வழியில் அல்ல
நீள் வழி என்றாலும் நல் வழி பற்றி.

## நா

பரிவு பிரிவு தெளிவு உயர்வு
மகிழ்ச்சி புகழ்ச்சி இகழ்ச்சி எழுச்சி
பிறப்பு இறப்பு நினைப்பு கசப்பு
உறவு ஊடகம் நிறைவு நின்மதி
பேசும் வார்த்தைகளாலேயே
விழைந்து விடுகிறது
பார்த்து விடுங்கள் வார்த்தைகளை
பாசத்துக்குரிய உறவுகளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஏ) மாற்றம்

விழிமேலே காதல் கொண்டு
வியந்து கவிபாடி
கலைமேலே காதல் கொண்டு
கண்டு களிப்புற்று
மொழிமேலே காதல் கொண்டு
மொழிந்து உறவாடி
குழல் மேலே காதல் கொண்டு
பூச் சரங்கள் சூடி மகிழ்ந்த
நம் காதல் மரபின்று
உடலுக்கும் பணத்துக்குமாய்
உருக்குலைந்து போகிறது
ஏமாற்றங்களை மட்டும் பரிசளித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலை

சாவைக்கண்டு
என்றுமே பயந்ததில்லை-என்
சாதிக்கும் காலம் குறுகிவிடும் என்றே
கவலை கொள்கிறது
என் மொத்த இரகசியமும் பொதிந்த
குட்டி மனசு.

## சாத்தியமற்றவை

கத்தும் கடல் என்றும்
அமைதியாகுமோ?
கானல் நீர் வற்றி போகுமோ?
வெட்ட வெளியினில்
மீன்கள் வாழுமோ?-நம்
மொத்த பசியும் நீங்குமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காப்பு

சாதி மத பேதமெல்லாம்
ஒழிஞ்ச அழகு நாடு-இன்று
போதைவஸ்து பாலியலில்
மாட்டி நிற்குது பாரு
ஆறு அறிவு படைச்ச மனிதன்
விதைச்ச கேடு தானே-இதைப்
பார்த்தும் கடவுள் பூமி வர
பயப்படுகிறானே
நாதியற்று அழுவதனால்
என்ன பயன் கிட்டும்-இதைக்
கூறுபோட வழி அமைப்போம்
இளைஞர்களே வாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீனிக்ஸ் பறவைகள்

படிக்கோம்
பாதியில் ஆயுளை முடிப்போம்
குடிப்போம்
குழுக்களாகி கூத்துக்கள் அடிப்போம்
கற்பை தொலைப்போம்
கலை கலாசாரங்களை
சிதைப்போம்
காட்டியும் கூட்டியும் கொடுப்போம்
கேட்க நாதியின்றி இறப்போம் என நீ
நினைத்தாயோ?

## நியதி

உளி தரும் வலியை
தாங்கிடும் கல்தான்
சிலையெனும்
வடிவம் பெறுகிறது
வலி தரும் தண்டிப்பை
தாங்கிடும் மனிதன்தான்
வாழ்க்கையில் உயர்ச்சி அடைகிறான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசி

அன்று அறிவுப் பசிபோக்க
ஓடினோம்
இன்று வயிற்றுப் பசிபோக்க
ஓடுகின்றோம்
நாளை நம் குடும்பப் பசிபோக்க
ஓடுவோம்
நாம் ஓடுவது வேறுவேறு
வழிகள் என்றாலும்
ஓட வைப்பது பசிதானப்பா.

## ஊழல்

பணத்துக்கும் பதவிக்கும்
இடையில் மட்டும் ஊழல்கள் நிகழவில்லை
உதட்டுக்கும் உள்ளத்துக்கும்
இடையில் கூட நிகழ்கிறது
அதனால்தான் சொல்லப்படுபவைகள்
செய்யப்படுவதில்லை
செய்யப்படுபவைகள் சொல்லப்படுவதில்லை
இவ் உலகமெங்கிலுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறுபாடு

இல்லாதவன் இருக்கிறவன்கிட்ட
பணத்த பொருள எடுத்தா
திருடன் ஆகிறான்
இருக்கிறவன் இல்லாதவன்கிட்ட
உழைப்பை உரிமையை எடுத்தா
முதலாளி ஆகிறான்

## விழிப்பு

விடியலை தேடி அலையாதே
மானிடா-நீ
விழிக்கும்வரை
இருள் விலகப் போவதில்லை
விழித்துக்கொள்-உன்
விழியின் ஒளி பட்டே
இரவுகள் பஸ்பமாகிவிடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவினமும் கூடி புது நாடு அமைப்போம்

யாதும் நம் ஊரே
யாவரும் நம் உறவுகளே
தீது வரமுன் தீர்வு பெற முயல்வோம்
போர் தந்த வடுக்களை சீர் செய்வோம்
காலம் கடந்த ஞானம்தான்-இருந்தும்
கருத்தில் கொள்வோம்
யார்வந்து நமக்கு தீர்வு சொல்வது
யாம் எல்லோரும் ஒரு தாய்ஈன்ற
மக்களன்றோ ?

மனித இனம் ஒன்று
மானத்தில் பேர்போன குணம் ஒன்று
தாய்மை ஒன்று
தரமான பண்புகள் ஒன்று
தெய்வ நம்பிக்கை உண்டு
திருமணம் பிரசவம்
வேலை வேதனை
இழப்பு இறப்பு
இதயத்துடிப்பு என்று
எல்லாமே ஒன்றானபோது
இனத்தை மொழியை நிலைநிறுத்தி
ஏனிந்தப் போராட்டம்?
காரணங்கள் பலதால்
கை கோர்த்தோம்
பாகுபாடு பார்த்து
பகைமை பாராட்டினோம்
கொலைகள் கொள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிலடங்கா சித்திரவதைகள்-என
சிந்திய குருதிகளால்
என்ன சுகம் கண்டோம்?

சிறுபான்மை பெரும்பான்மை
ஒழியவேண்டும்
சகபாடி வாழ்வியற்றும்
முறைமை வேண்டும்
படு பாதக போதனைகள்
மறைய வேண்டும்
பரிசுத்த குணங்களே எங்கும்
ஓங்க வேண்டும்

சிறைச்சாலை சித்திரவதை முகாம்
அகல வேண்டும்
சிங்களம் தமிழ் மொழிகளிடையே
சமத்துவம் வேண்டும்
ஒரே நாடு ஒரே ஆட்சி
உண்டு-அது
இனங்கள் ஒதுக்கப்படாத
தன்மையில் மலர்வதே சிறப்பு

பிறக்கும் போது எதனுடனும்
பிறக்கவில்லை
இறக்கும் போதும் எதையும் கொண்டு
இறக்கப்போவதுமில்லை
இருக்கும்போது வாழும்
வாழ்வதனை
இனிமை உடையதாய் மாறச் செய்வோம்
கசக்கும் போர் இன பேதம்
இனியும் வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறை படிந்த பூமியை
பூ மரங்கள் நிறைக்கட்டும்
கழுகு வல்லூறுகள் சிறகு விரித்த
காலம் தொலையட்டும்
வெண் புறாக்கள் கூட்டம்
விண்ணை நிறைக்கட்டும்
விந்தை மாற்றம் உருவாகி
நம் மக்கள் கூட்டம்
சிந்தை குளிர வாழட்டும்

எங்கள் காலம் முடிந்தாலும்
எதிர் காலம் சிறக்கட்டும்
இயற்கை இறப்பு இன்னலற்ற வாழ்வு
இன மத பேதமற்ற கரம் கோர்ப்பு
இயற்கை பசுமை
இனிதான வாழ்க்கை என்று
ஒரு நாடாய் ஒரே மக்களாய்-எம்
இறையாண்மை நிலைநாட்ட
உடன் முயல்வோம்
தொடர்வோம்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவைகள்

அன்றைய அத்தியா அவசிய
தேவைகள்
உணவு,உடை,உறைவிடம்
இன்றைய அத்தியா அவசிய
தேவைகள்
தொலைபேசி,வலைப்பின்னல்,மின்சாரம்.

## அவள் யாரோ?

கலையோ சிலையோ
கவியோ கலைநயமோ
அழகோ அருந்தமிழோ
அபினய தேவ கன்னிகையோ
நிலவோ நீழ்வான் தாரகையோ
தினம் தினம் என்
கனவுலகில் அரசாளும்
அவள் யாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்மையின் வலிது

கால நீட்சியிலே
கோரமான பல போர்களிற்கும்
கொலைகளிற்கும்
கோதைகளின் கண்ணீரும்
காரணமாய் அமைகிறது
ஆண்களின் புயங்களை விட
பெண்களின் விழியும்
விழி நீரும் வீரியம் வாய்ந்தது

## மரணிப்பு

உடலை விட்டு
உயிர் போனால் மட்டும்
மரணமில்லை
நாம் நேசிக்கும் உறவுகள்
நமை விட்டு போக
தனிமையை உணரும்-அந்த
தருணங்கள் கூட மரணம் தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதப் பிரதிபலிப்பு

பிறப்பு வீதம் குன்றி
இறப்பு வீதம் கூடி
படிப்பு வீதம் குன்றி
பொறுக்கி வீதம் கூடி
தொழில் வீதம் குன்றி
தொல்லை செய்யும்
குழுக்கள் வீதம் கூடி
திருமண வீதம் குன்றி
தினம் ஒரு பெண்ணோடு
கூடும் வீதம் கூடி
குலம் காக்கும் வீதம் குன்றி
குடிகாரர் வீதம் கூடி
சதிராடும் சினிமா மோகத்தில்
சாவுக்கு நேந்துவிட்ட
வேள்விக் கடாக்களாய்
எதிர்கால சிந்தையற்று அலையும்
ஆண் வர்க்கத்தை-இனி
எவர் வந்துதான் மீட்பாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வ பயம்

இன்னும் பலரிடையே
தெய்வ பயம் உள்ளதால் தான்
இன்னும் பல குற்றங்கள
இடம்பெறாமலேயே இருக்கிறது.

## போலிகள்

நிலையில்லா பதவிகளையும்
நிறைவில்லா பணத்தையும் வைத்து
ஏழைகள் முன்
போலி மனிதம் போடும்
ஆடம்பர ஆட்டங்களை
எப்படிச் சொல்வேன் ஆண்டவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம்

அறுவடை முடிந்த
வன்னி வயல்களில்
எருமைகள் கூட்டம்
இன்னும் அலைகிறது
மீண்டும் முளைவிடும்
நெல் மணிகளை சிதைத்தபடி

## காதலும் கடந்து போ

ஜோடிகளை காணும்போதெல்லாம்
நாடிதனில் காதல் முறுக்கேறும்
சிலர் நாடிகளை காணும் போதெல்லாம்
காதல் கசந்து போகும்
தாடியோடு தாளாத வலிகளையும்
தாங்கிப் பழகணுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவின் ஆரம்பம்

பயிலும் இடங்கள் சில
பாலியல் வல்லுறவுக் கூடங்களாய்
பாட ஆசிரியர் சிலர்
பக்குவப்பட்ட வண்டுகளாய்
மகரந்தத்தை பறித்துக்கொண்டு
மொட்டுக்களின் இதழ் விரிப்பை
வேடிக்கை பார்க்கின்றவர்களாய்
அந்த மணம் வீசா மலர்களோ
தண்டவானங்களை அலங்கரிக்கின்றனவாய்
மலர் சுமந்த செடிகளோ
மனமுடைந்து மடிந்து போவனவாய்
தரங்கெட்ட நிகழ்கால நீட்சியை
எண்ணிப் பார்க்கிறேன்-எல்லாம்
அவர்கள் இல்லாத குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையாய் நீ வேண்டும்

மலரும் வாடும்
முகிலும் மாறும்
கலையும் மாயும்
சிலையும் பேரும்
கயலும் சாகும்
நதியும் காயும்
நிலவும் தேயும்
நீழ் வான் தாரகைகளும் வீழும்
நிலையாய் உனை
வேண்டுவதால்
எதை நான் ஒப்பி பாடுவதோ
அழகே என் அகமாழும் உயிரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதிகள்

நினைத்தவை எல்லாம்
கிடைத்தவை அல்ல
கிடைத்தவை எல்லாம்
நிலைத்தவை அல்ல
தழைத்தவை எல்லாம்
பிழைத்தவை அல்ல
பிழைத்தவை எல்லாம்
செழித்தவை அல்ல
பிரித்தவை எல்லாம்
வெறுத்தவை அல்ல
வெறுத்தவை எல்லாம்
வேண்டப்படாதவையும் அல்ல
கலைத்தவை எல்லாம்
கனவுகள் அல்ல
கனவுகள் இல்லாதது
வாழ்க்கையுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்காதல் மரபு

மனசு மலர் விழி
கடிதம் கணையாளி கற்பொழுக்கம்
அன்றைய காதலுக்கு அவசியமானவை
கட்டுடல் கவர்ச்சி கைத்தொலைபேசி
பணம் கருத்தடைச் சாதனங்கள்
கூத்தடிக்க மறைவிடங்கள்
இன்றைய காதலுக்கு அவசியமானவை
நாளைக்கும் மாற்றம் பிறக்கலாம்
புனிதம் போற்றவல்ல புதைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொக்கிசம்

இன்று புதைக்கப்படும்-நம்
கலாசாரங்கள்
நாளை புதையல்களாக
கிடைக்கப் பெறலாம்
இருக்கும் வரை
பூதமாக நான்
காவல் செய்துகொண்டுதான் இருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி



இலக்கியப் படைப்பாளியான திரு.செல்வராசா கஜானன் அவர்கள் 1993.01.08 இல் புலோப்பளை எனும் அழகிய கிராமத்தில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை கிளி/பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை கிளி/பளை மத்திய கல்லூரி, கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, யாழ்/பரியோவான் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் கற்றவர். பள்ளிப் பருவத்தில் பயிலும் காலத்திலிருந்தே பேச்சு, விவாதம், நாடகம், ஓவியம், கவிதை, பிரசங்கம் போன்ற துறைகளில் பங்குபற்றி, தனது பன்முக ஆளுமையை வெளிப்படுத்தியவர். அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டிகளிலும் ஏனைய போட்டிகளிலும் பங்குபற்றி, வெற்றிகளையும் சாதனைகளையும் தனதாக்கிக் கொண்டவர். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதிவருவதோடு தொலைக்காட்சி, வானொலி, போன்றவற்றின் கவியரங்குகளிலும் பங்குபற்றிவருகின்றார். தமிழ்ப்பண்பாட்டு, விழுமியங்களைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் அக்கறையுடையவர்.

2015ஆம் ஆண்டு "கனவுகளின் புலர்வு" எனும் கவிதை நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் "சொற்கணை" விவாதப் போட்டிகளின் நடுவராகச் செயற்படுபவர். 2016ஆம் ஆண்டு நடைபெற்ற கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டு விழாவில் வடமாகாண பிரதம செயலரினால், கவிதைத் துறைக்கான "இளங்கலைஞர்-2016" விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டவர்.

இவர், இவ்வருடம் "வ(ளி)ழிதேடும் புல்லாங்குழல்" எனும் கவிதை நூலை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கவிதைத் துறையின் ஆழ, அகலங்களை இனங்கண்டு காத்திரமான பல நூல்களைத் தொடர்ந்தும் வெளியிடவேண்டுமென எல்லாம் வல்ல இறையருள் இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

**திருமதி.பி.மதுரநாயகம்,**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

9789557899022
Rs.200/-

VIJAY PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org